# திருச்சிராப்பள்ளி மாநகராட்சி

**2025 ஆம் ஆண்டு மே மாதம் செவ்வாய்கிழமை நாள் 06.05.2025 காலை 10.35 மணியளவில் திருச்சிராப்பள்ளி மாநகராட்சி காமராஜ் மன்றம் ஏ.எஸ்.ஜி. லூர்துசாமி கூட்ட மண்டபத்தில் பின்வரும் பொருள்களைப் பற்றி அவசரக் கூட்டம் நடைபெறும்.**

## நிகழ்ச்சி நிரல்

### பொருள்: 1

திரு.மு.அன்பழகன் M.A., மாநகரச் செயலாளர் – திருச்சி மாநகரம் (மேற்கு), திராவிட முன்னேற்றக் கழகம்" அவர்களின் விண்ணப்பம், நாள் 05.05.2025ல், திருச்சிராப்பள்ளி மாநகராட்சி, வார்டு குழு அலுவலகம் 5, **புத்தூர் கிராமம், தேர்தல் வார்டு எண் 26, பழைய சர்வே எண் 57 பாகம், புதிய வார்டு Y, பிளாக் எண் 9, சர்வே எண் 57/12, புத்தூர் – EVR சாலையில்**, 6.00 ச.மீ. (64.58 சதுரடிகள்) பரப்பளவில், மறைந்த **நடிகர் திலகம் டாக்டர்.செவாலியே சிவாஜி கணேசன்** அவர்களுடைய **திருவுருவச் சிலையினை**, அரசு வழிகாட்டுதல் மற்றும் விதிகளுக்குட்பட்டு, தனது சொந்தச் செலவில் அமைக்க உரிய அனுமதியும், ஆட்சேபனையின்மைச் சான்றும் (NOC), மேலும் அச்சிலையினை எதிர்காலத்தில் தனது சொந்தப் பொறுப்பிலேயே பராமரிக்க அனுமதியும் வழங்கிடுமாறு கோரப்பட்டதனைத் தொடர்ந்து, காவல் ஆணையர் அவர்களுக்கு தடையின்மைச் சான்று வழங்கிடக் கேட்டுக் கொள்ளப்பட்டு, காவல் துறையின் கடிதம், நாள் 05.05.2025ல் மேற்படி சிலை அமைக்க தடையின்மைச் சான்று வழங்கப்பட்டது.

அதனைத் தொடர்ந்து, ஆய்வு மேற்கொள்ளப்பட்டது. உத்தேச இடம், நகரளவைக் கணக்கில் **ஆறுமுகம் பிள்ளை மகன் குமாரசாமி** எனக் குறிப்பிடப்பட்டுள்ளது. மேலும், **"ரயத்துவாரி – நத்தம் மனை"** எனவும் வகைப்பாடு செய்யப்பட்டுள்ளது.

மேலும், மேற்படி இடத்தினை தானமாக, இடத்தின் உரியமையாளர்களால் (திருமதி.மரகதம், செல்வி.கு.பூரணி மற்றும் செல்வி.கு.தரணி), திரு.மு.அன்பழகன் M.A., மாநகரச் செயலாளர் – திருச்சி மாநகரம் (மேற்கு), திராவிட முன்னேற்றக் கழகம்" அவர்களுக்கு, ஆவண எண் 1921/2025, நாள் 05.05.2025ன் வாயிலாகப் பத்திரப் பதிவு செய்து தரப்பட்டுள்ளது.

இந்நிலையில், **பார்வை (1)ல் காணும் அரசாணையில்,** சிலை அமைப்பது தொடர்பான வழிமுறைகள் கீழ்க்கண்டுள்ளவாறு குறிப்பிடப்பட்டுள்ளது.

2. **சிலை அமைத்தல் , பராமரித்தலுக்கான முழுச் செலவையும் சிலை அமைக்கக் கோருபவரே ஏற்றுக் கொள்ள வேண்டும்**
3. **வெண்கலத்தினாலான சிலையினை மட்டுமே அமைக்க வேண்டும் . அதன் பின்னர், மாவட்ட ஆட்சியர் அவர்கள் , சம்பந்தப்பட்ட உள்ளாட்சி அமைப்பு , நெடுஞ்சாலைத்துறை மற்றும் காவல் துறையினரின் அறிக்கையுடன் , தனது பரிந்துரையை அரசிற்கு அனுப்பி வைக்க வேண்டும்**

எனவே, **மனுதாரரின் விண்ணப்பம் மற்றும் காவல் துறையின் தடையின்மைச் சான்றின் அடிப்படையில்,** மேற்படி திருவுருவச் சிலையினை அமைக்க அரசின் அனுமதியினைப் பெற்றுத்தரக் கோரி, மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்களுக்குக் கடிதம் அனுப்பி வைக்க ஏதுவாக, மாமன்றத்திற்குப் பொருள் வைக்கப்படுகிறது.

**அலுவலகக் குறிப்பு :** மேற்படி திருவுருவச் சிலையினை அமைக்க அரசின் அனுமதியினைப் பெற்றுத்தரக் கோரி, மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்களுக்குக் கடிதம் அனுப்பி வைக்க ஒப்புதலளிக்கலாம்.

**(எப்1/6834/2010/மையம்)**

**தீர்மானம் எண்: 323 பொருள் :1 அலுவலகக் குறிப்பினை ஏற்று அனுமதி அளிக்கப்பட்டது.**

**மேயர்**
**திருச்சிராப்பள்ளி மாநகராட்சி**